**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**அசல் வழக்கு எண். 58/2021**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் செவ்வாய்கிழமை

வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எஸ்.முத்துராமன்,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரவியம் | க/பெ.: | ஜெயராமன் |
| கிராமம்: | அத்திக்கோட்டை | தாலுக்கா: | மன்னார்குடி |
| மதம்: | இந்து | தொழில்: | |
| வயது: | 53 | முகவரி: | வடக்கு தெரு , அத்திக்கோட்டை |

Solemnly affirmed in accordance with the provisons of Act X of – 1873 on day of 22.10.2024

**முதல் விசாரணை :-**

நான் வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்று ஆவணங்களாக கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.06.2009 | 1, 2 பிரதிவாதிகள் தாயார் பாக்கியத்தம்மாளுடன் சேர்ந்து செய்து கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை | சார்பதிவக நகல் |
| வா.சா.ஆ.2 | 15.06.2020 | வழக்கு சொத்தைப் பொறுத்து வாதியின் தாயார் பாக்கியத்தம்மாள் பெயரிலான சிட்டா மன்னார்கடி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கியது (நெ 2 ) | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 15.06.2020 | வழக்கு சொத்தைப் பொறுத்து மன்னார்குடி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய கணினி பட்டா ( நெ .2 ) | உண்மை நகல் |

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விாரணை**

எனது அம்மா பெயர் பாக்கியத்தம்மாள் , எனது அப்பா பெயர் சௌந்தர்ராஜன் அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். எனது பெற்றோர்களுக்கு நான்கு வாரிசுகள் 4 பேரும் பெண் வாரிசுகள் என்றால் சரிதான். 1 , 2 பிரதிவாதிகள் எனது அம்மாவுடன் 2009 ல் ஒரு பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் சரிதான். அதில் நானும் 3 ம்பிரதிவாதியும்

கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் மேல் சொன்ன பாகப்பிரிவினை எங்களை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். அதனால் சொத்தில் 4 ல் 1 பாகம் கேட்டு என் தங்கை வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதன்படி தீர்ப்பாணை பிறப்பிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை.

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.10.22 18:45:49 +0530

சார்பு நீதிபதி ,

மன்னார்குடி.